வந்தவாசி தாலூக்கா.

V. S. வெங்கடராமன் கம்பெனி,
டபீர் புதுத்தெரு :: கும்பகோணம்.

1928

[0—2—0

முன்னுரை.

கிராமாபிமானமே தேசாபிமானத்திற்கு அடிப்படையாகும். தாம் பிறந்த ஊரைப்பற்றிப் பெருமையுடன் நினைப்பதும், பேசுவதும் யாவர்க்கும் ஒரு கடமையாகும். அவ்வித உணர்ச்சி இல்லாதார் மனிதரிற் பதரே யாவர். நம் நாட்டுச் சிறுவர்கள், போலி நாகரிகத்தைப் பின்பற்றிக் கிராமங்களை வெறுத்து, நகரங்களை நாடுகின்றனர். உதர நிமித்தம் பெரியபட்டணங்களுக்குச் செல்ல நேரிடினும் கிராமங்களை இழிவாக நினைப்பது தகாது. சிறுவர்களுக்குக் கிராமப்பற்று உண்டுபண்ணுவது ஆரம்ப ஆசிரியர் பலர்க்கும் ஒரு முக்கிய நோக்கமாயிருத்தல் வேண்டும். அதுபற்றி மாணவர்களுக்குக் கிராமங்களைப்பற்றிய ஐதிகங்களையும், சரித்திரங்களையும், பூகோள விஷயங்களையும் எடுத்துக் கூறுதல் கிராமாபிமானத்தை வளரச் செய்யும் துறைகளுள் முதன்மையாகும். அதற்குச் சாதகமாக இத்தகைய தாலூக்கா பூகோள நூல் மிக்க நன்மை பயக்குமென்று கருதப்படுகிறது.

கிராமங்களைப் பற்றிக் கன்னபரம்பரையாக வழங்கிவரும் ஸ்தல சரித்திரங்களும், ஐதிகங்களும், நாளடைவில் மறக்கப்பட்டு, மறைந்து கொண்டே வருவது விசனிக்கத்தக்கதே. இவ்வித வெளியீட்டால் அவைகள் நீடித்து வழங்குதல் கூடுமென்பதற்கு ஐயமில்லை.

பெரும்பாலும் ஊர்களின் பெயர் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணம்பற்றியே ஏற்பட்டுளது. அவைகள் காலக்கிரமத்தில் சொல்லுரு மாறியிருப்பது உற்று நோக்கத்தக்கது. மேலும் அவ்வுண்மைப் பெயர்களைச் சிறுவர்களுக்கு விளக்குவது, அவைகளை அவர்கள் சொற்பிழையின்றி எழுதுவதற்குச் சாதகமாகும். இதற்கு உதாரணங்கள் பல இந்நூலில் காணலாம். சீஷமங்கலம் என்று தற்காலம் வழங்கும் பெயர் ஸ்ரீ புருஷ மங்கலம் என்னும் பெயரின் திரிபே; மங்கை நல்லூரென்பது மங்க நல்லூரென்று மாறி வழங்குகிறது.

சிறுவர்களின் பொது அறிவை விருத்தி செய்யப் பூகோளம் ஒரு முக்கிய நவீன பாடம். அதற்கான பாட திட்டப்படி I, II வகுப்புகளில் குடும்பம் — கிராமத்தைப் பற்றியும், IIIவதில் தாலூக்காவைப் பற்றியும், IV வதில் ஜில்லாவைப் பற்றியும், Vல் சென்னை இராஜதானியைப்பற்றியும் போதித்தல் வரையறுத்த பாகமாகும், ஒவ்வொரு தாலூக்கா சம்பந்தமாக பூகோள புத்தகங்கள் எழுதப்பட்டு அச்சிட்டுவெளிவருவது அவசியமே. அவைகளை அத்தாலூக்காக்களிலுள்ள III வது வகுப்பு மாணாக்கர்கள் வாங்கிப் படிப்பதால் மேற்கூறிய நன்மைகளை அடைவார்களென்பது திண்ணம்.

WANDIWASH,
10-9-1928.

S. SIVARAMAKRISHNAN,
Deputy Inspector of Schools,
WANDIWASH RANGE.


வந்தவாசி
தாலூகா
சேயாறு தாலூகா
காஞ்சீபுரம்
தாலூகா
திண்டிவனம் தாலூகா
மதுராந்தகம் தாலூகா
போளூர் தாலூகா
செஞ்சி
சேயாறு
சுகநதி
இரும்பேடு
தெள்ளாறு
தெய்யாறு
தேசூர்
சேயமங்கலம்
பொன்னூர்
நல்லூர்
வல்லம்
மழையூர்
காடு
ஏரி
ரோட்
மைல

வந்தவாசி தாலூக்கா

கிராமம்.

பாலர்களே! நீங்கள் வசிக்கும் கிராமத்தைச் சுற்றிப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? அதன் பெயர் என்ன? உங்கள் கிராமத்தைப்பற்றி அடியிற் கண்ட விஷயங்களைக் கவனித்துக் கோடிட்ட இடங்களை ஊருக்குத் தக்கவாறு பூர்த்தி செய்யுங்கள்.

கிராமத்தின் பெயர்..................வீடுகளும் வயல் வெளிகளும் சேர்ந்து கிராமம் எனப்படும்.

வீடுகளும் தெருக்களும் :—வீடுகளின் வரிசையே தெருவாகிறது.

	தெருக்களின் பெயர்.	மொத்த வீடுகள்.
1	....	....
2	....	....
3	....	....
4	....	....

ஆக.........வீடுகள்

கோயில்கள் :— இக்கிராமத்தில் பிள்ளையார், சிவன், பெருமாள், மாரியம்மன், திரௌபதியம்மன் முதலிய தெய்வங்களுக்கு ஆலயங்களும், மசூதி, மாதாகோயில்களும் இருக்கின்றன. இக்கோயில்களில் எந்தெந்த மாதங்களில் திருவிழாக்கள் நடைபெறுகின்றன ?

நீர் நிலைகள் :— குடி தண்ணீர்க் குளம், கிணறுகள் இருப்பதுடன், வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச ஓர் ஏரியும் இருக்கின்றது. ஆறு, வாய்க்கால், ஓடை இவை இருக்கின்றனவா? இக்கிராமத்தில் பெய்யும் மழைத் தண்ணீர்.................. ....திசையாக ஓடி............ல் விழுகிறது; ஆகவே இந்த ஊர்...............திசையை நோக்கிச் சரிகிறது.

ஜனத் தொகை :—

ஆண்...............
பெண்...............
ஆக...................

ஜாதி :—பிராமணர், வேளாளர், செட்டியார், ரெட்டியார், இடையர், வன்னியர், படையாட்சி, ஆதி திராவிடர், முதலான பல ஜாதியார்கள் உளர்.

பாஷை :—பெரும் பான்மையோர் தமிழும், சிலர்தெலுங்கும், மஹம்மதியர் இந்துஸ்தானியும் பேசுகிறார்கள்.

தொழில்கள் :—பயிர்வேலையே முக்கிய தொழில். தச்சன், கருமான், குயவன், அம்பட்டன், வண்ணான், கொத்தன், தட்டான், சேணியன், இடையன் முதலிய தொழிலாளர்களும் இருக்கின்றார்கள்.

கிராமாதிகாரிகள் :—(1) வரி வசூல் செய்யக் கிராம முனிசீப்பும், நிலங்களை அளந்து கட்டிச் சாகுபடிக் கணக்குகள் வைக்கக் கணக்கப்பிள்ளையும், இவ்விருவருக்கும் உதவியாகத் தலையாரி, தோட்டிகளும் உள்ளார்கள்.

(2) இருநூறு ரூபாய்க் குட்பட்ட கொடுக்கல், வாங்கல் (சிவில்) கேஸ்களையும், சிறு குற்றங்களையும் (கிரிமினல் வழக்குகள்) விசாரித்து முடிவு செய்யக் கிராம பஞ்சாயத்துக் கோர்ட்டு ஏற்பட்டிருக்கிறது. கிராமத்தார்களால் அதன் மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். அம்மெம்பர்களில் ஒருவர் பஞ்சாயத்துக் கோர்ட்டுப் பிரசிடெண்டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அதிகாரம் வகிக்கிறார்.

(3) கிராம சுகாதாரம், கல்வி, முதலிய பொது நலங்களைக் கவனிக்கக் கிராம பஞ்சாயத்து அமைக்கப்பட்டிருக்கிறது. கிராமவாசிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இதன் மெம்பர்களும், பிரசிடெண்டும் அவற்றைக் கவனிக்கிறார்கள்.

கல்வி :—இந்த ஊரில் ஒரு (போர்டு, பஞ்சாயத்து அல்லது கிராண்டு) ஆரம்ப பாடசாலை இருக்கிறது. அதில்..............வகுப்புகள் உள. ....மாணாக்கர்கள் கல்வி கற்கிறார்கள்.

நன்செய், புன்செய் :—இந்த ஊர் நத்தத்தைச் சுற்றித் தோப்புகளும், வயல்களும், புன்செய்க் காடுகளும் உள. நன்செய்களில் நெல், கரும்பு, வாழை, வெற்றிலை, மஞ்சள் முதலியனவும், புன்செய்களில் கரும்பு, கேழ்வரகு, சோளம், பருத்தி, நிலக்கடலை, எள், துவரை முதலியனவும் பயிராக்கப் படுகின்றன. தோட்டக் கால்களில் கத்தரி, வண்டை, கொத்தவரை, புடல், பாகல், வெள்ளேரி, மிளகாய், முதலிய காய்கறிகளும், மல்லிகை, முல்லை, ரோஜா, அலரி முதலிய புஷ்பச்செடிகளும் பயிரிடுகிறார்கள்.

போக்கு வரவு சாதனங்கள் :— சுற்றுப்புறக் கிராமங்களுக்குப் போக நடைபாதைகளும், வண்டி ரோட்டுகளும் உள. இந்த ஊருக்குத் தபாலாபீஸ் ....ல் இருக்கிறது.

எல்லைகள் :—இக்கிராமத்தின் கிழக்கில்...... கிராமம் ; தெற்கில்...........; மேற்கில்...........; வடக்கில்...........

பிர்க்கா

பல கிராமங்கள் சேர்ந்து ஒரு பிர்க்கா ஆகும். அதற்கு முக்கிய அதிகாரி ரெவின்யு இன்ஸ்பெக்டர். உங்கள் கிராமம் எந்தப் பிர்க்காவைச் சேர்ந்தது ?

நம்பர்	பிர்க்காவின் பெயர்	கிராமங்கள்	நன்செய் (பட்டா வானது) ஏகரா	புன்செய் (பட்டா வானது) ஏகரா	வருஷத்தில் ஸர்க்கார் வரி ரூ.
1	பெரணமல்லூர்	23	6119	16477	74 ஆயிரம்
2	சாலவேடு	35	5718	15544	72 ,,
3	தெள்ளாறு	33	5730	18071	68 ,,
4	வந்தவாசி	35	6706	17423	79 ,,
5	தேசூர்	36	5230	17402	72 ,,
6	நெடுங்குணம்	35	3749	14428	51 ,,
	ஆக...	207	33252	99345	416 ,,

மேற்கண்ட ஆறு பிர்க்காக்களும் சேர்ந்தது வந்தவாசி தாலுக்கா. இத்தாலுக்காவில் கவர்மெண்ட் கிராமங்கள் 203 ; சுரோத்திரியம் இனம் 4.

வந்தவாசி தாலூக்கா.

எல்லைகள் :—வந்தவாசி தாலூக்காப் படத்தைப் பாருங்கள்! வடக்கில் சேயாறு தாலூக்கா ; கிழக்கில் செங்கற்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த மதுராந்தகம், காஞ்சீபுரம் தாலூக்காக்கள் ; தெற்கில் தென்னுற்காடு ஜில்லாவைச்சேர்ந்த திண்டிவனம், செஞ்சி தாலூக்காக்கள் ; மேற்கில் போளூர் தாலூக்காவும், ஆறணி ஜாகீரும்.

விஸ்தீரணம் :—இத்தாலூக்கா கிழக்கு மேற்கில்சுமார் 30 மைல் தூரமும், தெற்குவடக்கில் சுமார் 15 மைல் தூரமும் வியாபித்திருக்கிறது. விஸ்தீரணம் 340 சதுர மைல்.

இயற்கை அமைப்பு :—பொதுவில் இத்தாலூக்கா ஒரு சமவெளியாகும். ஆனுல் சிற்சிலவிடங்களில் குன்றுகளும் காடுகளும் உள. பூமி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிச் சரிகிறது.

குன்றுகள்:—நெடுங்குன்றம், வெண்குன்றம், விடால் மலை, தெள்ளூர் மலை, இவை முக்கியமானவை. சீயமங்கலம், பொன்னூர் முதலிய பல இடங்களில் கற்பாறைகள் உள.

குறிப்பு:—(1) சேய் (முருகக்கடவுள்) + ஆறு = சேயாறு (சண்முக நதி).
(2) ஆறு + அணி = ஆறணி. நதி அருகாமையிலுள்ள ஊர் என்பதே பொருத்தமாகும் ; சிலர், ஆர் + அணி = 'ஆரணி' (அழகு பொருந்திய ஊர்) என்றும் கூறுகிருர்கள்.

நெடுங்குன்றம் :—இது கடல் மட்டத்திற்கு மேல் 1485 அடி உயரமுள்ளது. இக்குன்று வெகு தூரம் வரையில் தெரிகிறது.

வெண்குன்றம் (தவளகிரி) 1020 அடி உயரம் உள்ளது. இதில் இரண்டு சிகரங்கங்களிருக்கின்றன. அவைகளில் ஒன்றில் தவளகிரி நாதருக்குச் சிறிய தோர் ஆலயம் கட்டப்பட்டிருக்கிறது.

தை, ஆடி, கார்த்திகை இம்மாதக் கிருத்திகைகளில் திரளான ஜனங்கள் இங்குள்ள முருகனை வணங்கச் செல்லுகிறார்கள். மலையின் அடிவாரத்திலும் ஒரு கோயிலிருக்கிறது. அதிலுள்ள கல் வெட்டில் கணௌஜ் அரசனுடைய தாய் ரத்தினபாய் என்பவள் இராமேச்சுரத்துக்குச் செல்லும் பொழுது கி. பி. 1768-ல் இங்கு வந்து இறந்ததாக எழுதப் பட்டிருக்கிறது.

இத்தாலூக்காவிலுள்ள கற்பாறைகள் துண்டுகளாக வெட்டப்பட்டுச் சுவர்கள் கட்டவும்

ரோட்டுகள் போடவும் உபயோகப்படுகின்றன; உயர்ந்த கல் (சிலைகள், அம்மி, உரல் முதலிய செய்யும்) வேலைக்குப் பயனற்றனவாகும்.

காடுகள்:—எச்சூர், பொன்னூர், நம்பேடு, விசாமங்கலம், நெடுங்குணம் முதலிய இடங்களில் ஸர்க்கார் காடுகளிருக்கின்றன. இக்காடுகளில் பெரிய விருக்ஷங்கள் இல்லை. விறகுக்கு உபயோக முள்ள செடிகளும் சிறிய மரங்களும் வளர்கின் றன. இக்காடுகள் ஆடுமாடுகள் மேய்வதற்கு உபயோகமானவை.

நதிகள்:—இத்தாலூக்காவில் பெயர்பெற்ற நதி ஒன்று கூட இல்லை. வந்தவாசியிலுள்ள சுகநதி அவ்வூருக்குச் சற்று மேற்கில் உற்பத்தி யாகிக் கிழக்கு முகமாக ஓடிச் செங்கற்பட்டு ஜில்லா வில் பாலாற்றிற் கலக்கிறது. மழை பெய்வதால் இதில் வெள்ளம் பெருகுவதுடன், மடுக்களில் தண்ணீர் ஊறி ஓடுவதும் உண்டு.

ஏரிகள்:— பெரிய கிராமங்கள் தோறும் ஓர் ஏரி சாதாரணமாக இருக்கின்றது. சில ஏரிகள் ஆற் றுக்கால் தண்ணீர் வரத்துள்ளன. மற்றவைமழைத் தண்ணீராலேயே நிரம்புகின்றன. இவ்வித ஏரி களே இத்தாலூக்காவில் நன்செய் நிலங்களுக்கு முக்கிய பாய்ச்சலாதாரம். சேயாறு அணைக்கட்டி லிருந்து வரும் வாய்க்கால்நீர் ஆயிலவாடி, கொவளை வேடு, தென்னூர் ஏரிகளுக்கும், சுகநதித்

தண்ணீர் பருதாடு, கொடுங்காலூர், உளுந்தை ஏரி களுக்கும், சீயமங்கலம் ஓடை ஆச்சமங்கலம் நெற்குணம் ஏரிகளுக்கும் வருகிறது.

கிணறுகள் :—வயலில் வெட்டிய சொந்த கிணறுகளிலிருந்து தண்ணீர் இறைத்துப் பல விடங்களில் சாகுபடி செய்கிறார்கள்.

நில வளம் :—பெரும்பாலும் மணலும் பருக்கைக் கற்களும் கலந்த பூமியா யிருப்பதால் இத் தாலூக்கா மிகவும் பூசாரம் குறைந்தது. செம்மண் பூமியும் கருமண் பூமியும் சிலபாகங்களில் உண்டு; இவை செழிப்புள்ளன. தென்னை, வாழை, காய் கறிகள் பசும்பால் இவை கிடைப்பது மிக அரிது. ஆட்டுப்பால் தயிர்தாம் சாதாரணமாகக் கிடைக்கும். பனைமரங்கள் மிகுதியாக வளர்கின்றன.

விளை பொருள்கள்:—நன்செய்யில் நெல்லும் கோரையும்,புன்செய்யில் கேழ்வரகு, கம்பு,சோளம் மணிலாக்கொட்டை முதலியனவும் முக்கிய விளை பொருள்களாகும். சில இடங்களில் எள், ஆமணக்கு, துவரை சாகுபடி செய்யப்படுகின்றன.

பழவேரி, காட்டேரி, இரும்பேடு இக்கிராமங் களில் வெற்றிலை பயிர் செய்யப்படுகிறது. இத் தாலூக்காவில் புகையிலை சாகுபடி அதிகம்.

கைத்தொழில் :—பெரும்பான்மையோர் பயிர் வேலை செய்கிறார்கள். அம்மையப்பட்டு, கொடுங்

காலூர், குண்ணகம் பூண்டி, தேசூர், மடம், நெடுங்
குணம் முதலிய இடங்களில் நெசவுத்தொழி லதி



கம். வந்தவாசி, தென்னாங்கூர், கீழ் நரமா முதலிய
இடங்களில் கோரைப்பாய்கள் நெய்கிறார்கள்.
நெல் குத்துவதற்கான யந்திரங்கள் பல கிராமங்

147437

களில் ஏற்பட்டுள. வந்தவாசி, தேசூர் இவ்வூர் களில் தோல் கிடங்குகள் உள. ஆலிலேயைத் தைத்து விற்றலே இத்தாலூக்காப் பெண்டிர்கள் ஒரு கிரகத் தொழிலாகச் செய்து வருகிறார்கள். இரும்பேடு, கீழ்ச்செம்பேடு இவ்வூர்களில் க்ஷவரக் கத்திகளும், மேல் நந்தியம் பாடியில், பித்தளை வெண்கலப் பாத்திரங்களும் செய்யபட்படுகின்றன.

V2113

வியாபாரம்:—இத்தாலூக்காவிலிருந்து வெளியூர்களுக்கு அனுப்பப்படும் பொருள்களாவன:—மணிலாக்கொட்டை, புகையிலை, கோரைப் பாய், கோரை, தோல். இந்தத் தாலூக்காவுக்கு வரும் வெளியூர்ப் பொருள்களாவன:—சீமைச் சாமான்கள் (மண்ணெண்ணெய், கண்ணாடி, சீமைத்துணி, லாந்தர் விளக்குகள், காகிதம்) காப் பிக்கொட்டை, உப்பு, பாத்திரங்கள், ஜவுளிகள், பழவர்க்கங்கள் முதலியன.

போக்கு வரவுக்குச் சாதனங்கள்:—இத் தாலூக்காவில் ரெயில் மார்க்கமேயில்லை. ஆனால் தென் இந்தியா இருப்புப்பாதையில் அச்சிறு பாக்கம் (18-மைல்) திண்டிவனம் (22-மைல்) ஸ்டேஷன்களுக்கும், ஆரணி, சேயாறு, செங்கல் பட்டு, காஞ்சீபுரம், நெடுங்குணம் முதலிய இடங் களுக்கும் வந்தவாசியிலிருந்து மோட்டார் வண்டி கள் செல்லுகின்றன. பண்டைக்காலத்தில் காசி ராமேசுரம் பாதை இத்தாலூக்கா வழியாகச்

சென்றதால் ரோட்டுகளில் மைலுக்கு மைல் குளமும், சாவடியும், தோப்பும் காணப்படுகின்றன. கிராம வண்டிப் பாதைகள் மிக்க கேவல நிலைமையிலிருக்கின்றன. பல கிராமங்களுக்குச் சரியான பாதைகளே கிடையா.

சீதோஷ்ண ஸ்திதி:—இத்தாலூக்கா வரட்சியாயிருப்பதால் தேக சௌக்கியத்திற்கு ஏற்றதே. வருஷத்தில் சராசரி 46 அங்குலம் மழை பெய்கிறது. ஜனவரி முதல் ஏப்ரல்வரை=1".29 மழை. மே மாதத்தில்=3".43 மழை. ஜூன் முதல் செப்டம்பர்வரை (அதாவது தென்மேற்குக் காற்றுக் காலத்தில்)=19".61 மழை. அக்டோபர் முதல் டிசம்பர்வரை (அதாவது வடகிழக்குக் காற்றுக் காலத்தில்) 21". 54 மழை. சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் உஷ்ணம் மிக அதிகம். பல கிராமங்களில் குடிக்கத் தண்ணீர் கிடைப்பது கூட அரிது. தை, மாசி மாதங்களில் பனியும் குளிரும் அதிகம். பல கிராமங்களில் நரம்புச் சிலந்தி நோயிருப்பது பற்றி ஜனங்கள் எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும்.

ஜனத்தொகை:—இத்தாலூக்காவில் சுமார் 1¾ லக்ஷம் ஜனங்கள் வசிக்கிறார்கள். ஆண் 85436, பெண் 86274. ஒரு சதுர மைலுக்குச் சராசரி 505 ஜனங்கள் இருக்கிறார்கள்.

மதம் :—

இந்துக்கள்.........160470
மஹம்மதியர்கள்..... 4252
கிறிஸ்தவர்கள்....... 3006
ஜைனர்கள்.......... 3982

அதாவது 100-க்கு 92 பேர்கள் இந்துக்கள், 3 மஹம்மதியர்கள், 2 கிறிஸ்தவர்கள், 3 ஜைனர்கள்.

பாஷை :—1000 பேருக்கு 860 தமிழும், 130 தெலுங்கும், 6 இந்துஸ்தானியும், 4 கன்னடம் முதலிய இதர பாஷைகளும் பேசுகிருர்கள்.

கல்வி :—வந்தவாசியில் உயர்தரக் கல்விச்சாலையும், குழப்பலூர், தேசூர், பெரணமல்லூர் இக் கிராமங்களில் உயர்தர ஆரம்ப பாடசாலைகளுமிருக்கின்றன. 500-க்குமேல் ஜன சங்கியையுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பிரதம பாடசாலை ஏற்பட்டிருக்கிறது. என்ருலும், எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் தற்காலம் 100-க்கு 86 ஆண்களும் 100க்கு 99 பெண்களும் உளர்.

அரசாட்சி :—இந்தத் தாலூக்காவுக்கு முக்கிய ரிவினியு அதிகாரி தாசில்தார். அவருக்குமேல் "டிவிஷனல் ஆபீஸர்" சேயாற்றிலும், ஜில்லா கலெக்டர் வேலூரிலும் வசிக்கிருர்கள். கிரிமினல் கேஸுகளை விசாரிக்க சப் மாஜிஸ்திரேட் வந்தவாசியிலும், ஸிவில் கேஸ்களை விசாரிக்க ஜில்லா முனிசீப்பு ஆரணியிலும் இருக்கிருர்கள். தெள்

ளாறு, வந்தவாசி, பெரணமல்லூர், இவ்விடங்களில் போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. இத்தாலூக்காவுக்கு முக்கிய போலீஸ் அதிகாரி ஸர்க்கில் இன்ஸ்பெக்டர்.

இத்தாலூக்கா சேயாறு தாலூக்கா போர்டைச் சேர்ந்தது. வந்தவாசியில் யூனியன் போர்டும் பல கிராமங்களில் கிராம பஞ்சாயத்துகளும் ஏற்பட்டுள. பஞ்சாயத்து இயக்கம் இங்கு வெகுவாகப் பரவியிருப்பதால் கிராமங்கள் முன்னேற்றத்தை அடைவதற்கு அது சாதகமாக இருக்கிறது.

கொடுக்கல் வாங்கலுக்குச் சாதகமாகப் பல கிராமங்களில் ஐக்கிய நாணயசங்கங்கள் இருக்கின்றன.

தபாலாபீசுகள் வந்தவாசி, மருதாடு, சாலவேடு, இளங்காடு, கீழ்கொவளே வேடு, தெள்ளாறு, தேசூர், நல்லூர், பெரணமல்லூர், வல்லம், தென்னங்கூர், குழப்பலூர் இவ்வூர்களிலிருக்கின்றன.

முக்கிய கிராமங்கள்.

(1) வந்தவாசி:—இது சுகநதிக்கரையிலிருக்கிறது. தாலூக்காவுக்கு முக்கிய இடம். இது ஒரு யூனியன். ஜனத்தொகை 6770 (இந்துக்கள் 4832, மகம்மதியர் 1706, கிறிஸ்தவர் 232). ஒவ்வோரிலாகா சம்பந்தமான தாலூக்கா

அதிகாரிகளுக்கு ஆபீசுகளும், ஒரு பெரிய ஆஸ்பத்திரியும், உயர்தரக் கல்விச்சாலையும் (ஹை ஸ்கூல்) இருக்கின்றன. ஐக்கிய நாணய சங்கங் களின் கிளர்ச்சி இங்கு அதிகம். கோரைப் பாய் களும், பதனிட்டதோலும் இங்கிருந்து வெளி யிடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. பிரதி புதன் கிழமையும் வாரச்சந்தை கூடுகிறது.

ஜயகண்டன் என்னும் சோழராஜன் சூலை நோயால் வருந்திப் பல க்ஷேத்திரங்களுக்குச் சென்றும் பயன்படாமல் இங்கு வந்தான். கரை யான் புற்ருல் மூடப்பெற்ற ஒரு சிவலிங்கம் இருப்பதாகவும் அதற்கு ஒரு கோயில் கட்டும் படியும் கனவு கண்டு அவ்வாறே செய்வித்தான் ; நோயும் நீங்கிற்று. இவ்வூருக்கு வந்து அவன் நோய் வாசியானதால் வந்தவாசி என்ற பெயர் வழங்கலாயிற்று.

தேச சரித்திர சம்பந்தமாக இவ்வூர் மிக்க விசேஷமுடையது. இப்பொழுதுகூட ஊருக்கு வடக்கில் ஓர் இடிந்த கற்கோட்டையும் அகழும் இருக்கின்றன. இவைகட்கு அருகிலுள்ள ஆஞ்ச நேயர் கோயில் மிக்க சக்தி வாய்ந்தது.

பதினெட்டாம் நூற்ருண்டில் நடந்த கர்நாடக யுத்தத்தில் இங்கு பல சண்டைகள் நிகழ்ந்தன. முற்காலத்தில் இக்கோட்டை ஆற்காடு நவாப்புக் குச் சொந்தமாக விருந்தது. 1752-வது வருஷத்

தில் மேஜர் லாரென்ஸ் என்பவரும், 1757-இல் கர்னல் ஆன்டர்ஸன் என்பவரும் இப்பட்டணத்தைத் தாக்கினார்கள் ; ஆனால் கோட்டையைப் பிடிக்க முடியவில்லை. பிரெஞ்சு சைனியங்கள் இங்கிலீஷ்காரரை இருமுறை துரத்தி யடித்தார்கள். 1759-இல் பிரையர்டன் (Brereton) துரையும் எதிர்த்துத் தோல்வி யடைந்தார். பிரெஞ்சு சேனைகளில் ஒற்றுமை யில்லாமையால் அதே ஆண்டின் முடிவில் கர்னல் கூட் என்பவரால் கோட்டை பிடிக்கப்பட்டது. 1760-ல் லாலி என்னும் சேனைத் தலைவரின் கீழாகப் பிரெஞ்சுக்காரர்களும் புஸ்ஸியின் கீழாக 3000 மராட்டியர்களும் சேர்ந்து வந்தவாசியை எதிர்த்தார்கள். ஆனால் அவர்கள் கூட் என்பவரால் தோல்வி யடைந்து சின்ன பின்னம் ஆக்கப்பட்டார்கள். பிரெஞ்சு சேனைத் தலைவரான புஸ்ஸியும் சிறை பிடிக்கப்பட்டான். இந்த வந்தவாசி முதல் யுத்தத்தின் வெற்றி பிரெஞ்சுக்காரர்களின் கொட்டத்தை யடக்கி, ஆங்கிலேயர்களின் நிலைமையைப் பெலப்படுத்தியது.

பிறகு 1780-ல் ஐதர்ஆலி வந்தவாசியைப் பிடிக்க முயன்றபொழுது லெப்டினென்ட் பிளின்ட் (Flint) வெகு சாமர்த்தியமாக வெகுகாலம் கோட்டையைப் பாதுகாத்தார். சர் அயர்கூட் என்பவரின் உதவியால் 1783-ல் எதிரிகள் தோல்வியடிக்கப்பட்டார்கள்.

(2) தேசூர்:—(3312 ஜனத்தொகை) இத் தாலூக்காவில் இதுதான் இரண்டாவது பெரிய ஊராகும்; தேசூர் பிர்க்காவுக்கு இது முக்கிய இடம். கிராம வைத்தியசாலை, போலீஸ் அவுட் போஸ்ட், தபாலாபீஸ், இவையுள. துணி நெய்தல், தோல் பதனிடல் இங்கு முக்கியமான கைத் தொழில்கள். முற்காலத்தில் இது செஞ்சியுடன் சேர்ந்த ஒரு ஜாகீர். பழைய கோட்டையின் இடிந்த பாகங்கள் இப்பொழுதும் காணப்படுகின்றன.

(3) தெள்ளாறு:—(2186) வந்தவாசி-திண்டிவனம் ரோட்டிலிருக்கிறது. சப் ரிஜிஸ்தரார் ஆபீஸும், போலீஸ் ஸ்டேஷனும், லோகல் பண்டு சத்திரமும் இருக்கின்றன. பிரதி வியாழக் கிழமையும் இங்குக் கூடும் வாரச்சந்தையில் மாடு, துணி, தான்யங்கள் அதிக வியாபாரமாகின்றன. படைவேட்டு நந்தி ராஜாவால் கட்டப்பட்ட ஒரு பழைய மண்கோட்டை காணப்படுகிறது. இக்

கோட்டைக்குள் ஒரு சிவன் கோவிலிருக்கிறது. முற்காலத்தில் தொண்டைமண்டலத்தைச் சேர்ந்த வெண்குன்றக் கோட்டத்தின் ஒரு பாகமாக இந்த ஊர் இருந்தது.

(4) பெரணமல்லூர் :—(3231) இது இந்தப் பிர்க்காவின் முக்கிய இடம். கிராம வைத்தியசாலை யும் போலீஸ் ஸ்டேஷனும், சப்ரிஜிஸ்தரார் ஆபீஸும் ஏற்பட்டுள.

(5) நெடுங்குன்றம்:—(1750) மலையடிவாரத்தி லிருக்கும் இராமர் கோயிலும், தீர்க்க கிரீசுவரர் ஆலயமும், குன்றின்மேலுள்ள மாதாகோயிலும் விசேஷமுடையன. துணி நெய்தல் அதிகம்.

(6) சாலவேடு:—(1564) வந்தவாசி அச்சிறு பாக்கம் ரோட்டில் இருக்கிறது. வாரச் சந்தை இங்குப் பிரதி வெள்ளியிலும் கூடுகிறது.

(7) மழையூர் :—(1308) இது வந்தவாசி சேத்துப்பட்டு ரோட்டிலிருக்கிறது. இது ஒரு சந்தை கூடுமிடம் (வெள்ளிக்கிழமை).

(8) மருதாடு :—(அமரர் தண்டு) 3567. வந்த வாசிக்குக் கிழக்கில் 4-மைல் தூரத்திலிருக்கிறது. இந்திரன் முற்காலத்தில் இங்கு வந்து பூசை செய்ததால் இவ்வூரில் கோயில் கொண்டருளிய ஸ்வாமிக்குப் புரந்தரேஸ்வரர் (புரந்தரன்—இந் திரன்) என்ற பெயர் ஏற்பட்டதாம். இவ்வூருக்கு

ஒருமைல் தூரத்திலுள்ள வழூவூரும் ஒரு சிவஸ்தலம்.

(9) தெய்யாறு (2272) இங்கு வைஷ்ணவர்கள் அதிகம். அகோபில மடத்தைச் சேர்ந்த ஒரு சிறு கோவிலிருக்கிறது.

(10) தென்னங்கூர்:—(1084) இது வந்தவாசி — காஞ்சீபுரம் ரோட்டில் இருக்கிறது. கோரை விளைவு அதிகம்.

(11) சீயமங்கலம்:—(891) ஒரு காலத்தில் தேசூர் ஜாகீரைச் சேர்ந்தது; அவ்வூருக்குத் தெற்கில் ஒரு மைல் தூரத்திலிருக்கிறது. இது முற்காலத்தில் பிரசித்திபெற்றதாக ஏற்படுகிறது. இங்கு ஜம்பு ராஜனால் கட்டப்பட்ட ஒரு சிவன் கோவிலிருக்கிறது. ஒரு குன்றின் ஒரு பாறையிலிருந்தே லிங்கம் (ஸ்தம்பேஸ்வரர்), மண்டபம், கோயில் இவை முழுவதும் கல்வெட்டு வேலையால் குடைந்து அமைக்கப்பட்டிருப்பது ஆச்சரியமானது.

(12) வல்லம் (1538). ஒரு சிவன் கோயில் இருக்கிறது. கரும்பு சாகுபடி அதிகம்.

ஊர்கூடி:—(321)
வணக்கம்பாடி:—(701)
சோத்துப்பாக்கம்:—(436)
ஆனைபோகி:—(1094)

இந்த ஐந்து கிராமங்கள் சம்பந்தமாக ஒரு கதை கூறப்படுகிறது. தாரகாசுரனுடைய சகோதரி வல்லபி இவ்வல்லம் கிராமத்திலிருந்து சுற்றுப் புறக் கிராமங்களுக்குப் பலவித கொடுமைகளை இயற்றி வந்தாள். ஊர்கூடி என்னுமிடத்திற் தேவர்கள் ஒன்றுகூடித் தங்களைக் காப்பாற்றச் சுப்பிரமணிய ஸ்வாமியை வேண்டினார்கள். அவர் வணக்கம்பாடியில் மிக்க வணக்கத்துடன் விநாயகரை வணங்கிச் சோற்றுப் பாக்கத்தில் தயாரிக்கப் பட்ட அன்னத்தால் அவரைப் பூசை செய்தார். விநாயகர் யானை உருவங்கொண்டு ஆனைபோகியில் வல்லபியைக் கொன்றார்.

(13) பொன்னூர் :—(2649) இது ஒரு செழிப்பான கிராமம். ஜைனர்கள் அதிகம். இதற்கு அருகில் ஒரு காடும் குன்று மிருக்கின்றன. இக்குன்றின் மேல் ஏளாச்சாரியார் என்னும் ஜைன ஸ்வாமிகள் பாதங்களின் கல்வெட்டு உருவங்கள் உள; வைகாசிமாதத்தில் குருபூஜை செய்யத் திரளான ஜைனர்கள் அங்குச் செல்லுகிறார்கள்.

(14) குழப்பலூர் :—(2572) சேயாற்றங் கரையிலிருக்கும் ஒரு பெரிய ஜைன கிராமம்.

நாவல் பாக்கம்:—(719) இது ஒரு சுரோத்திரிய கிராமம். இங்குள்ள வைணவர்களில் சிலர் வடமொழி வித்துவான்கள். இவ்வூர்ப் பெருமாள் கோயிலில் நடைபெறும் திருவிழா சிறப்பானது.

(16) ஆவணியாபுரம் :—(1255) சேயாறு நதிக்கருகில் இருக்கிறது. இங்குள்ள அணைக்கட்டில் பிரியும் ஆற்றுக்கால் பல ஏரிகளுக்குப் பாய்கிறது. இங்கு ஒரு குன்றிலுள்ள லக்ஷ்மி நரஸிம்ம ஸ்வாமி கோவில் மிக்க சக்தி வாய்ந்தது.

(17) கீழ்க்கொடுங்காலூர் :—(1642) இங்கு நெசவுத்தொழில் அதிகம்; ஒரு சிவன் கோவிலிருக்கிறது.

(18) திருமால்பாடி :—தேசூருக்கு 3-மைல் தூரத்திலிருக்கிறது. இங்கு ஒரு சிறு குன்றின் மேல் அரங்கநாதர் பள்ளிகொண்ட ஓர் ஆலயம் உண்டு.

(19) விடால்:—(1061) மலை சூழ்ந்த ஒரு கிராமம். இங்குப் புராதனமான ஒரு சிவன் கோவில் இருக்கிறது. தேசிங்குராஜன் காலத்தில் அது கட்டப்பட்டது.

(20) நெற்குணம்:—(நெல்குன்றம்) சேனல் (செந்நெல்), நல்லூர் (நெல்லூர்), நமண்டி (நெல்மண்டி), நெல்லியாங்குளம் (நெல் ஆகும் குளம்) இக்கிராமங்களில் முற்காலத்தில் நெல் விளைவு அதிகமாக இருந்ததாம்.

(21) உளுந்தை, ஆராசூர் - இவ்வூர்களில் நல்ல தயிர், பால் கிடைக்கும்.

(22) ஜெகன்னாதபுரம் :—இந்தச் சுரோத்திரிய கிராமம், சுமார் 200 வருஷங்கட்குமுன் நிஜாம்

([illegible]க்க மன்னன்) தன் சேனையுடன் இவ் வழி[illegible]லுகையில் தாகத்தால் வருந்த, கோனேரி ராவ் என்பவர் உடனே ஒரு கிணறு வெட்டி நல்ல தண்ணீர் அவர்களுக்கு அளித்த நன்றிக்காக இவருக்கு விடப்பட்டது. இவர் தமையன் ஜகந்நாதராவின் பெயர் இந்த ஊருக்கு வழங்கலாயிற்று.

வட ஆற்காடு ஜில்லா

வந்தவாசி, சேயாறு, போளூர், திருவண்ணமலை, வாலாஜாபேட்டை, திருப்பத்தூர், குடியாத்தம், அரக்கோணம், வேலூர் ஆக 9-தாலூக்காக்கள் சேர்ந்து இந்த வடஆற்காடு ஜில்லாவாகும். பாலாற்றுக்கருகில் ஆறு காடுகளிருந்தனவாகவும், அவைகளில் ரிஷிகள் தவம் செய்ததாகவும் ஓர் ஐதிகம். அதுபற்றி இந்த ஜில்லாவுக்கு ஆறு காடுகள் (ஆற்காடு) அல்லது ஷடாரண்யம் என்ற பெயர் வழங்குகிறது. இது போன்ற பல ஜில்லாக்கள் சேர்ந்து சென்னை ராஜதானி ஆகும். இந்த ஜில்லா சென்னை பல மாகாணங்கள் சேர்ந்தது நமது இந்தியா தேசம்.

நம் நாடு செழிக்க!

குறிப்பு:—ஆல்+காடு = ஆற்காடு. ஆலமரங்கள் அடர்ந்தகாடு. ஆர்+காடு=ஆர்க்காடு. ஆர் என்றால் ஆத்திமரம். ஆத்திமரக்காடு என்ற பெயரே பழய தமிழ் நூல்களில் காணப்படுகின்றன.

PRINTED AT THE ROYAL PRINTING WORKS, MOUNT ROAD, MADRAS.